பருத்தித்துறை நகரசபை

யாழ்ப்பாண மாவட்டம்

---------------------------------

1. நிதிக் கூற்றுக்கள்

-----------------------------

1.1 நிதிக் கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

---------------------------------------------------

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2013 மார்ச் 25 இல் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2012 மார்ச் 30 இல் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. ஆண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2013 செப்ரெம்பர் 20 இல் சபையின் தவிசாளருக்கு வழங்கப்பட்டது.

1.2 அபிப்பிராயம்

--------------------

எனது கணக்காய்வின் மூலம் தென்படுவதும் எனக்கு கிடைக்கப் பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் வழங்கப்பட்ட விளக்கங்களுக்கும் அமைய பருத்தித்துறை நகரசபையானது 2012 டிசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்குப் பதிவேடுகள் பேணி வருவருவதுடன் தவிசாளருக்கு என்னால் வழங்கப்பட்ட அறிக்கையில் நிதிசார் கூற்றுக்களில் ஏற்படுத்தப்பட்ட தாக்கங்களை தவிர கணக்கீட்டு நியமங்களின்படி பருத்தித்துறை நகரசபை சபையின் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிலைவரத்தையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் செயற்பாட்டின் நிதிசார் விளைவுகளையும் காசோட்டத்தையும் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

நிதிக் கூற்றுக்களில் அவதானிக்கப்பட்ட கணக்கீட்டுக் குறைபாடுகள் சொத்துக்கள், பொறுப்புக்கள் மற்றும் வருமானம் தொடர்பில் பின்வரும் அட்டவணையில் காட்டப்படுகின்றன.

| நிதிக் கூற்றுக்கள் மீதான தாக்கம | சொத்துக்கள் | | பொறுப்புகள் | | வருமானம் | |
|---|---|---|---|---|---|---|
| | சந்தர்ப்பங் களின் எண்ணிக்கை | பெறுமதி ரூபா | சந்தர்ப்பங் களின் எண்ணிக்கை | பெறுமதி ரூபா | சந்தர்ப்பங் களின் எண்ணிக் கை | பெறுமதி ரூபா |
| குறைத்துக் கூறல்கள் | | | - | - | 01 | 10,017,755 |
| அதிகரித்துக் கூறல்கள் | 01 | 22,853 | 02 | 709,184 | | |
| வகைப்படுத்தல் வழு | 01 | 29,250 | - | - | - | - |

### 1.3.2 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

கணக்காய்வுக்குத் தகவல்களைச் சமர்ப்பிக்காமை

தேவையான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையால் ரூபா 8இ127இ941 பெறுமதியுடைய 04 கொடுக்கல் வாங்கல்களை கணக்காய்வின்போது சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது.

2. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு
-----------------------------------------------------

2.1 நிதிசார் விளைவுகள்
-------------------------------

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின்படி மீளாய்வாண்டிற்கான சபையினுடைய நிதிப்பெறுபேறுகள் செலவினத்திலும் கூடிய வருமான மிகையாக ரூபா 1இ030இ071 விளைந்திருப்பதுடன் நேரொப்பான முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது செலவிலும் கூடிய வருமான மிகையாக ரூபா 2இ579இ336 விளைந்திருந்தது.

2.2 நிதிசார் கட்டுப்பாடு
----------------------------

பாதீட்டு மதிப்பீடானது சரியான முறையில் தயாரிக்கப்படாமையால் பாதீட்டு வருமானத்திற்கும் உள்ளவாறான வருமானத்திற்கும் இடையே ரூபா 31இ875இ951 வேறுபாடு ஏற்பட்டதுடன் பாதீட்டு செலவினத்திற்கும் உள்ளவாறான செலவினத்திற்கும் இடையே ரூபா 8இ456இ810 வேறுபாடு ஏற்பட்டுள்ளமை கணக்காய்வில் அவதானிக்கப்பட்டுள்ளது.

2.3 வருமான நிர்வாகம்
--------------------------------

2.3.1 மதிப்பிடப்பட்ட வருமானம் உள்ளபடியான வருமானம், நிலுவை வருமானங்கள்
----------------------------------------------------------------------------------------------------------------

தவிசாளரினால் சமர்ப்பிக்கப்பட்டவாறு மீளாய்வாண்டு தொடர்பான மதிப்பிடப்பட்ட வருமானம், உள்ளபடியான வருமானம் நிலுவை வருமானங்கள் மீதான தகவல்கள் கீழே தரப்பந்துள்ளன.

| வருமான விடயம் | மதிப்பிடப்பட்டது | உள்ளபடியானது | திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட நிலுவைகள் |
|---|---|---|---|
| | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 |
| இறைகளும் வரிகளும் | 966 | 1,068 | 3,373 |
| குத்தகை வாடகைகள் | 46,728 | 16,377 | 107 |
| அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 229 | 403 | - |
| வேறு வருமானங்கள் | 31,662 | 29,862 | 1,694 |

### 2.3.2 வருமான அறவீடு

ரூபா 4,246,822 பெறுமதியான அரசிறைக் கடனாளிகள் நிலுவையை அறவிடுவதற்கு சபையினால் எந்தவித ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எவையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.3.3 வருமான பாதிப்பு

i. 1999ம் ஆண்டிலிருந்து மின்சார செயற்பாடுகள் அனைத்தும் இலங்கை மின்சார சபையிடம் கையளிக்கப்பட்ட போதும் சபையின் எல்லைக்குட்பட்ட வீதி மின் விளக்குகள் பொருத்துதல் சம்பந்தமாக இலங்கை மின்சார சபையுடன் ஒப்பந்தம் மேற்கொள்ளாமல் சபையின் நிதியில் கொடுப்பனவு செய்யப்பட்ட ரூபா 1,182,000 பெறுமதியான செலவினத்திற்கு மீளளிப்பு கிடைக்காமையால் சபைக்கு வருமான பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

ii. சபையினால் அமைக்கப்படும் கடைத் தொகுதி கட்டி முடிப்பதில் காலதாமதம் காரணமாக சபைக்குக் கிடைக்க வேண்டிய வருமானம் குறித்த காலப் பகுதியில் கிடைக்காமையால் சபைக்கு வருமான பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

2.3.4 நீதிமன்றத் தண்டப்பணம்

----------------------------

வெவ்வேறு கட்டளைச் சட்டங்களின் கீழ் நீதவான் நீதிமனறங்களிலிருந்து நடைமுறையாண்டுக்கு பெறப்பட வேண்டிய ரூபா 2,698,500 பெறுமதியான நீதிமன்றத் தண்டப் பணங்களும் கணக்குகளுக்குக் கொண்டு வரப்பட்டிருக்கவில்லை.

2.3.5 முத்திரைத் தீர்வைக் கட்டணம்

----------------------------------------------

2010, 2011 மற்றும் 2012 ம் ஆண்டுகளுக்கென காணிப் பதிவாளர் நாயகத்திடமிருந்து பெறப்பட வேண்டிய முத்திரைத் தீர்வைக் கட்டணம் முறையே ரூபா 3,731,540 , ரூபா 6,196,884 மற்றும் ரூபா 7,319,255 கணக்குகளுக்குக் கொண்டு வரப்பட்டிருக்கவில்லை.

2.4 சொத்துக்களின் முகாமைத்துவம்

-------------------------------------------------------

2.4.1 பயன்படுத்தப்படாத மற்றும் குறைப் பயன்பாட்டிற்குட்பட்ட பௌதீக வளங்கள்

-----------------------------------------------------------------------------------------------------------------------

i. சபை நிதி மூலம் கொள்வனவு செய்யப்பட்டதும் நன்கொடையாக வழங்கப்பட்டதுமான 47 எண்ணிக்கையான பொருட்கள் பழுதடைந்த நிலையிலும் 18 எண்ணிக்கையான பொருட்கள் திருத்தம் செய்யப்பட வேண்டிய நிலையிலும் 113 எண்ணிக்கையான பொருட்கள் ஏல விற்பனை செய்யப்பட வேண்டி இருந்தது. எப்படியாயினும் அச் சொத்துக்கள் பயன்படுத்தப்படாமல் களஞ்சியத்தில் காணப்படுகின்றமை இருப்புக் கணிப்புச் சபை அறிக்கை மூலம் அவதானிக்கப்பட்டுள்ளது.

ii. சபையின் 270 – 0050 இலக்கமுடைய உழவியந்திரம் ஒன்று பாவனைக்குட்படுத்தப்படாது பழுதடைந்த நிலையில் களஞ்சியத்தில் உள்ளது.

iii. இருப்புக் கணிப்பீட்டுச் சபை அறிக்கையினால் ஏலவிற்பனை செய்யப்பட வேண்டும் எனக் கூறப்பட்ட 23 அல்கத்தீன் பைப் காணாமல் போயுள்ளமை நேரடிப் பரீட்சிப்பின்போது அவதானிக்கப்பட்டுள்ளது.

2.4.2 அறவிடப்பட வேண்டிய பதவியினர் கடன்கள்

---

பதவி வறிதாக்கப்பட்ட உத்தியோகத்தர்களின் ரூபா 8,000 பெறுமதியான அறவிடப்படாத பதவியினர் கடன் நிலுவைகளை அறவிட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

2.4.3 மெய்மையாய்வு செய்யப்படாத சொத்துக்கள்

---

கணிப்பீட்டுச் சபை அறிக்கையினால் உறுதிப்படுத்தப்படாத புத்தகப் பெறுமதி அடிப்படையில் கணக்கிடப்பட்ட சொத்துக்களின் பெறுமதி ரூபா 20,173,019 ஆகக் காணப்படுகின்றது.

2.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணக்கமின்மை

---

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமைக்கான சந்தர்ப்பங்கள் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் நிதிப்பிரமாணங்களுடனான தொடர்பு | விபரம் |
|---|---|
| (அ) இலங்கை ஜனநாயகச் சோசலிசக் குடியரசின் நிதி ஒழுங்கு விதி | |
| (i) நிதி ஒழுங்கு விதி இலக்கம் 571 | இரண்டு வருடத்திற்கு மேற்பட்ட ரூபா 8,682,183 பெறுமதியான நானாவித வைப்புக்கள் தொடர்பாக நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) நிதி ஒழுங்கு விதி இலக்கம் 234 | 06 மாதத்திற்கு மேற்பட்ட ரூபா 1,700 பெறுமதியான இரண்டு வசூலிக்கப்படாத காசோலைகள் தொடர்பாக நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படாது வைப்புக் கணக்கில் வைக்கப்பட்டுள்ளது. |
| (ஆ) வடமாகாண சபை நிதி ஒழுங்கு விதி | |
| நிதி ஒழுங்கு விதி இலக்கம் 101 மற்றும் 102 | உள்ளகக் கணக்காய்வு நிகழ்ச்சித் திட்டம் மற்றும் உள்ளகக் கணக்காய்வாளர்களின் அறிக்கைகள் காலாண்டு அடிப்படையில் கணக்காய்வள் தலைமையதிபதிக்குச் சமர்ப்பிக்கப் பட்டிருக்கவில்லை. |

| | |
|---|---|
| (இ) 2002 ம் ஆண்டின் 14 ம் இலக்க பெறுமதி சேர் வரிச் சட்டம் | 2010, 2011 மற்றும் 2012 ம் ஆண்டுகளில் அறவிடப்பட்ட ரூபா.1,058,742 பெறுமதியான பெறுமதி சேர் வரி உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்குச் செலுத்தப் பட்டிருக்கவில்லை. |
| (ஈ) 2009 ம் ஆண்டின் 09 ம் இலக்க நாட்டைக் கட்டியெழுப்பும் வரிச்சட்டம் | 2010, 2011 மற்றும் 2012 ம் ஆண்டுகளில் அறவிடப்பட்ட ரூபா 175,921 பெறுமதியான நாட்டைக் கட்டியெழுப்பும் வரி உள்நாட்டு இறைவரித் திணக்களத்திற்குச் செலுத்தப் பட்டிருக்கவில்லை. |
| (உ) 2006 ம் ஆண்டின் பெறுகை வழிகாட்டி | சபையினால் நடைமுறையாண்டில் ரூபா 1,578,900 பெறுமதியான வாகனங்கள் பெறுகை நடைமுறைகளின் படி கூறுவிலைகள், பெறுகைக் குழுத் தீர்மானம் இன்றி கொள்வனவு செய்யப்பட்டுள்ளது. |
| (ஊ) அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை இலக்கம் - 15.∵.2007 | சபையினால் நடைமுறையாண்டில் சுற்றறிக்கைக்கு முரணாக உத்தியோகத்தர் ஒருவருக்கு இரு வருட சம்பளக் கடன் ரூபா 403,200 வழங்கப்பட்டுள்ளது. |

2.6 ஒப்பந்த நிர்வாகம்

---------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

அ. செயற்திட்டங்களைச் செயற்படுத்துவதில் காலதாமதம்

-----------------------------------------------------------------------------

i 2011 இல் சில்லறைக் கடனாளிகளில் ஏற்பாடு செய்யப்பட்ட ரூபா 566,011 பெறுமதியான 03 வேலைத்திட்டம் நடைமுறையாண்டு இறுதிவரை நடைமுறைப்படுத்தி கொடுப்பனவு மேற்கொள்ளப்படாது புதிய வேலைத்திட்டங்கள் நடைமுறைப் படுத்தப்பட்டுள்ளன.

ii நடைமுறையாண்டில் செயற்படுத்தவென பாதீடு செய்யப்பட்ட 05 மூலதன வேலைகள் நடைமுறைப்படுத்துவதில் காலதாமதம் காரணமாக எதிர்வரும் கலங்களில் செயற்படுத்தவென ரூபா 2,923,338 சில்லறைக் கடனாளிகள் கணக்கில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

iii நடைமுறையாண்டில் நிறைவேற்றவென பாதிடப்பட்ட ரூபா 8,800,000 பெறுமதியான 08 வேலைத்திட்டங்கள் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

2.7 செயற்பாட்டு செயற்திறமையின்மை

-----------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன

அ. சபைக்கு வழங்கப்பட்ட நன்கொடை ரூபா 1,120,346 குறித்த நோக்கங்களுக்குப் பயன்படுத்தப்படாது வைப்புக் கணக்கில் உள்ளடக்கப்பட்டிருப்பது சபைப் பரப்பிலுள்ள மக்களுக்கு கிடைக்க வேண்டிய நன்மைகளை பெற முடியாதுள்ளமையைக் காட்டுகின்றது.

ஆ. 2011 ம் ஆண்டில் பிடித்து வைக்கப்பட்ட ரூபா 171,174 பெறுமதியான பிடிபணங்கள் குறித்த ஒப்பந்தகாரர்களுக்குச் செலுத்தப்படாது நானாவித வைப்புக் கணக்கில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

இ. சனசமூக நிலையங்களுக்குச் செலுத்துவதற்கென நானாவித வைப்புக் கணக்கில் வைப்புச் செய்யப்பட்ட ரூபா 4,093 பெறுமதியான சனசமூக

நிலைய நன்கொடை இரண்டு வருடங்களுக்கு மேலாக குறித்த சனசமூக நிலையங்களுக்குச் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

2.8 உள்ளகக் கணக்காய்வு

------------------------------------

சபையில் போதியளவு உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை.

3. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

-------------------------------------------------

பின்வரும் முறைகைள், கட்டுப்பாட்டு பகுதிகளில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

1. வருமான சேகரிப்பு
2. நிலையான சொத்துக்கள்
3. நன்கொடை
4. நானாவித வைப்புக்கள்
5. வரவு செலவுத்திட்டம்